## சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியம் - 2016

சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாச்சல்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உரிப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்காள நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்தற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 2.2 பந்தியில் உன்ன காரணங்களை திருத்தம் செய்யும் போது அண்மைய வருடங்களுக்கான நிதிக்கூற்றுக்களில் உள்ள கூடுதலான தலைப்புக்களின் பொருண்மையான பிறழ்கூற்றுக்களின் தாக்கம் இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 பாதகமான அபிப்பிராயம்

---

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களில் உள்ள முக்கியமான காரணங்களினால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரான சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயற்திறன் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் அமையவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

---

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 01**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை இடப்பட்டிருந்த போதிலும், நியமத்திற்கு முரணாக உத்தியோகத்தர்களால் விதிக்கப்படும் தண்டங்கள் மற்றும் அரசுடமையாக்குதல் பணத்தின் அடிப்படையில் கணக்கீடுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) இந் நியமத்தின் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று வெளியிடப்பட்டிருப்பின் பாதிடப்பட்ட பெறுமதிகள் வேறாக நிதிக்கூற்றாக அல்லது ஒப்பீடொன்றான பிறிதொரு நிரலில் காண்பிக்கப்பட வேண்டும். எனினும், சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்களினுள் பாதிடப்பட்ட தகவல்கள் ளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) விசாரணை பணிகள் முடிவடைந்த போதிலும், வெகுமதி நிதியத்தின் கோவைகள் கணக்கீட்டு கிளைக்கு வழங்கப்பட்டிராமையாலும் மற்றும் விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கோவைகளுக்கான எந்தவிதமான தகவல்களும் இவ் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

நிதியத்தின் வருமானமாக சுங்கத் தண்டப்பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்கள் விற்றுப் பெறும் வருமானங்களில் 50 வீதம் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவ் வருமானது இனங்காணப்பட வேண்டியது சுங்க விசாரணைகள் முடிவடைந்த சந்தர்ப்பத்திலா, தண்டப்பணம் செலுத்தி முடிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலா அல்லது தண்டப் பணத்தை உத்தியோகத்தர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலா என்பது முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிராததுடன் உரிய கொள்கை நிதிக்கூற்றுக்களில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்வுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெகுமதி நிதியத்திற்காக கிடைக்கும் மொத்த வருமானம் 5 உப நிதியங்களிற்கு பங்கிடப்படுவதுடன், அவ்வாறு பங்கிடப்படும் கணிப்பீட்டு வழுக்களினால் ‘‘2.5 சதவீத’’ உபநிதியத்திற்கு ரூபா 200,000 இனால் நிதிகள் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியளவின் விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்திருந்த 81 எண்ணிக்கையான நிகழ்வுகளுக்கான கோவைகளுக்காக வழங்கப்பட்ட தண்டப்பணம் ரூபா 1,597,390,932 பெறுமதியில் ரூபா 436,806,066 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அறவிடப்பட வேண்டிய தண்டப்பணத்தில் நிதிக்கு பங்கிடப்பட்ட 50 வீதம் ரூபா 798,695,466 வருமானம் அறவிடப்பட்ட ரூபா 218,403,033 மற்றும் இன்னும் அறவிட வேண்டிய ரூபா 580,292,433 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சுங்க தண்டப்பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை வருமானத்தில் 50 சதவீதமான பங்களிப்பு வெகுமதி நிதியத்திற்கும் 20 சதவீதம் முகாமைத்துவ இழப்பீடு நிதியத்திற்கும் மிகுதி 30 சதவீதம் திரட்டு நிதியத்திற்கும் செலவு வைக்கப்பட வேண்டும். இது பற்றி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் நிதியத்தின் வருமானம் இனங்காணப்பட்டமையானது கணக்கீட்டு கிளைக்கு வெகுமதி கொடுப்பனவு செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இதனால் முகாமைத்துவ இழப்பீட்டு நிதியத்திற்காக வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 20,479,241 தொகைக்கு சமவிகித வெகுமதி நிதியத்துக்கு வருமானமாக இனங்காணப்பட வேண்டிய ரூபா 51,198,102 தொகையான வருமானங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தலிலான குறைபாடுகள்

விரிவான வருமான கூற்றின் படி செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 164,425,880 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது செலவினத்தை விஞ்சிய மிகையொன்றல்லாததுடன் இதன் சேர்க்கையாகியிருந்த வெகுமதி நிதியத்தின் உப நிதியமொன்றான எரிபொருள் நிதியத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 67,333,645 தொகை, 2.5 சதவீதமான நிதியத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 33,826,973 தொகை போதைப்பொருள் நிதியத்திற்கு ஒதுக்கி வைக்கப்பட்ட ரூபா 23,558,781 தொகையும் குறித்தொதுக்கப்படாத அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கி வைத்த ரூபா 39,706,481 உம் உள்ளடக்கியுள்ளது.

### 2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கி வைக்கப்பட்ட ரூபா 993,492,865 கூட்டுத் தொகையான வெகுமதிப்பணம் பல வருடங்களாக திரண்டு காணப்பட்டிருந்த போதிலும் அப் பணத்தை முறையாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 164,425,880 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 32,476,907 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 131,948,973 ஆல் அதாவது 406 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சுங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய வெகுமதிப்பண செலவினம் ரூபா 538,030,080 ஆல் அதிகரித்திருந்த போதிலும், தண்டப்பண வருமானம் ரூபா 721,644,255 இனால் அதிகரித்தமையால் மேற்படி அதிகரிப்பிற்கான முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சுங்க கட்டளை சட்டத்தின் 153(2) (ஆ) பந்தியின் பிரகாரம் வெவ்வேறு சுங்க தவறுகளுக்காக விதிக்கப்படுகின்ற தண்டப் பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் பணம் ஆகியவற்றின் 50 சதவீதத்திற்கு சமனான தொகை சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் சுங்க வரி மோசடி வெளிப்படுத்தப்படல், கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்த்தல் போன்ற நோக்கங்களை முன்னுரிமையாக கொண்டும் உத்தியோகத்தர்களுக்கு தகவல் வழங்குவோருக்கும் வெகுமதிகளை வழங்குவதற்காக கொடுப்பதற்கும் இந்நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது.

2012, 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகள் முறையே ரூபா 822,569,372, ரூபா 1,268,050,168, ரூபா 1,142,901,944, ரூபா 1,214,323,918 மற்றும் ரூபா 1,814,144,851 ஆக, ரூபா 6,261,990,253 கூட்டுத்தொகை உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தகவல் வழங்குவோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 5,586,704,859 அல்லது 89.21 சதவீதம் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் வழங்கியவர்களுக்கும் செலுத்திய தொகை ரூபா 822.5 மில்லியன் மாத்திரமான போதிலும், 2016 ஆம் ஆண்டில் அது ரூபா 1814.1 மில்லியன் வரை அல்லது 120 வீதத்தினால் இதிகரித்திருந்தது. அவ்வாறே இந்த பணம் அந்தந்த ஆண்டுகளில் விசாரணை முடிந்த சில சுங்க தவறுகளுக்காக மாத்திரம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் விசாரணை முடிவடையாத சம்பவங்களின் எண்ணிக்கை பெருமளவில் உயர்வான பெறுமதியொன்றினை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் சுங்கவரி மோசடியை கருத்தில் கொள்ளக் கூடியளவில் கட்டுப்படுத்தவோ குறைக்கவோ சுங்க வெகுமதி முறைமை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கணக்காய்வில் கேள்விக்குரியதாக இருந்தது.

(ஆ) இலங்கை சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில விசாரணைகளுக்காக அறவிடப்பட்ட தண்டப்பணம் மற்றும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட அளவு விபரம் பின்வருமாறு.

| சுங்க விசாரணை இலக்கம் | தண்டப்பணமாக அறவிடப்பட்ட தொகை | தண்டப்பணத்தில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதி | சாதாரண நிலையின் கீழ் அறவிடவேண்டியிருந்த வரி வருமானம் | தண்டப்பணத்தின் அடிப்படையில் கிடைத்த வரித் தொகை மற்றும் இழக்கப்பட்ட வரி பெறுமதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| INDS/BIU/39/2015 | 17,000,000 | 5,100,000 | 32,006,279 | 26,906,279 |
| INDS/BIU/32/2015 | 250,000 | 75,000 | 1,527,040 | 1,452,040 |
| INDS/BIU/43/2015 | 2,900,000 | 870,000 | 1,473,692 | 603,692 |
| INDS/BIU/31/2014 | 1,754,458 | 526,337 | 827,228 | 300,891 |
| மொத்தம் | 21,904,458 | 6,571,337 | 35,834,239 | 29,262,902 |

மேற்படி இவ்விடயம் தொடர்பாக பின்வருவன அவதானிக்கப்பட்டிருந்தன.

(i) சுங்கத் தவறுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுங்க விசாரணை சாதாரண முறையில் இறக்குமதியின் அடிப்படையில் அரசிற்கு கிடைக்க வேண்டிய குறைந்த வரி வருமானத்தின் பெறுமதி பற்றி கருத்தில் கொள்ளப்படாது சுங்கத் தவறுக்காக தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தமையால் அத் தண்டனைகளுக்கு உள்ளடக்கும் இறக்குமதியில் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தின் அளவு குறைவடைவதுடன் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் வெகுமதிப் பணத்தில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) சுங்க உத்தியோகத்தர் வெகுமதி நிதியத்திற்கு சேகரிக்கப்படும் வருமானத்தின் 1.485 சதவீதம் ஒதுக்கப்படும் எரிபொருள் நிதியத்திற்கு மீளாய்வாண்டில் ரூபா 67,333,645 செலவு செய்யப்பட்டிருந்தது. இந் நிதியம் உருவாக்கப்பட்டதன் நோக்கங்களாக சுங்க விசாரணைகளுக்கு தேவையான எரிபொருள் செலவினத்தை தீர்த்தல் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், விசாரணை நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் கிரயமானது திணைக்கள வாக்கு பேரேட்டிற்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் அந்த நிதியத்திலிருந்து எந்தவிதமான செலவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதியத்தின் கீழுள்ள உப நிதியமான ஆகிய 2.5 சதவீத வெகுமதி நிதியம் மற்றும் போதைப்பொருள் நிதியம் எனும் பெயரிலான உப நிதியங்களின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முறையே ரூபா 110,838,866 மற்றும் ரூபா 79,739,956 மீதிகள் இருந்த போதிலும், பல வருடங்களாக அந்த நிதியங்களில் எந்தவிதமான செலவும் செய்யப்படவில்லை. எவ்வாறெனினும், சாதாரண தேவைகளை கருத்தில் கொள்ளப்படாமல் தொடர்ச்சியாக காசு சேகரித்து வைக்கும்

இந்த நிதியங்களினுள் பெருந்தொகையான பணம் சேகரித்து வைக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(iv) தற்போது நிலவும் திறந்த பொருளாதார கொள்கை காரணமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள சிக்கல் தன்மையை பொருத்தமான முறையில் சுங்க கட்டளைச் சட்டம் உட்பட இந்நிதியங்களின் சட்ட ஏற்பாடுகளில் முறையாகவும் கால ரீதியாகவும் திருத்தங்கள் மேற்கொள்ளும் தேவைப்பாடு கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சுங்க விசாரணையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்காக அவருடைய பணியை செய்வதற்கு ஆரம்ப விசாரணை உத்தியோகத்தருக்கு சுங்க கட்டளைச் சட்டத்தில் 8 ஆம் பந்தியின் மூலம் சட்டரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த சட்டரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் பிஆர்இவி/எவ்பிஓ/1725/2015 ஆம் இலக்க சுங்க விசாரணை நடவடிக்கைகளுக்காக சுங்க விசாரணை உத்தியோகத்தரால் ரூபா 10 மில்லியன் பெறுமதியான தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் பெறப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் உரிய விசாரணை அதிகாரியினால் அந்த தண்டப்பணம் ரூபா 3 மில்லியன் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதனால் தண்டப்பணம் குறைக்கப்படுதல் சர்ச்சைக்குரிய விடயமாக இருப்பதுடன் சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வாறான சட்ட அதிகாரம் இல்லாமை பற்றி சட்டமா அதிபரால் எழுத்து மூலமாக சுங்க பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்திருந்தது.

# 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பிஎவ்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்கான திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 06 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட 06 வருமானம் மற்றும் செலவினம் விடயங்களுக்குரிய பெறுமதிகள் மற்றும் அவற்றுக்குரிய உள்ளபடியான பெறுமதிகளுடன் ஒப்பீடு செய்த போது 20 சதவீதம் தொடக்கம் 230 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது சுங்க பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) கணக்கீடு | முறையான பேரேட்டு கணக்கீட்டு முறைமையொன்றினை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் அட்டுறு அடிப்படையில் கணக்குகள் தயாரிக்கப்படாமை. |
| (ஆ) வெகுமதி கணிப்பீடு செய்தல் | வெகுமதி தொகையை கணிப்பிடும் போது அரசின் வரி வருமானம் பாதுகாக்கப்படும் வகையிலும், சுங்க வரி மோசடிகளில் கட்டுப்பாடொன்று ஏற்படும் வகையிலும் சுங்க வரி மோசடிகளில் ஈடுபடும் தரப்பினருக்கு ஆகக் கூடிய பாதகமொன்று ஏற்படக் கூடிய வகையில் நடைமுறை ரீதியாக கணிப்பிடும் நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்காமை |
| (இ) வெகுமதி கொடுப்பனவு | வெகுமதி கொடுப்பனவு உரிய கோவைகள் கணக்கு பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்திலேயே அக்கோவைகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்கின்படி கொடுப்பனவு மேற்கொள்ளாமை. |
| (ஈ) நிதியங்களின் குறைப்பயன்பாடு | மீளாய்வாண்டில் 2.5 சதவீத வெகுமதி நிதியம், போதைப்பொருள் நிதியம் மற்றும் எரிபொருள் நிதியம் ஆகிய உப நிதியங்கள் பயன்படுத்தப்படாமை. |